**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

-----

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, No.I, PERAMBALUR.**

| | | |
|---|---|---|
| Case Number | : | CMP.No.2107/2022 |
| Prosecution Witness | : | ம.சா.2 |
| Name | : | **பாலகிருஷ்ணன்** |
| Father's/Husband Name: | : | **சின்னசாமி** |
| Address : | : | **கிளைமேலாளர், ICICI வங்கி, பெரம்பலூர்.** |
| Age | : | 38/2022 |

தேதி:06/09/2022

**முதல் விசாரணை** : (சாட்சி சத்திய பிரமாணம் செய்யப்பட்டு முதல்விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டார்).

நான் தற்போது ICICI வங்கி பெரம்பலூர் கிளையில், கிளை மேலாளராக பணியாற்றி வருகிறேன். நீதிமன்றத்தில் இருந்து கிடைக்கப்பெற்ற அழைப்பாணையின் பேரிலும், எங்களது வங்கியில் பராமரிக்கப்படும் ஆவணங்களின் அடிப்படையிலும் சாட்சியம் அளிக்கிறேன். கவிதா என்பவர் எங்களது வங்கியில் DKJ Apparels என்ற பெயரில் நடப்பு கணக்கை அந்த நிறுவனத்தின் நிறுவனர் என்ற முறையில் பராமரித்து வருகிறார். அந்த கணக்கு எண்.36560500429. கடந்த 25.05.2021 அன்று இந்த வாடிக்கையாளர் அவரது வங்கி கணக்கில் காசோலை எண்கள் 006657, 000136, 000137, 000138, 000139 ஆகியவற்றை வசூலுக்காக தாக்கல் செய்தார். அப்போது கொரோன நடைமுறையில் இருந்ததாலும் எங்களது கிளையில் Clearing facility இல்லை என்பதாலும் நாங்கள் அதை கொரியர்

மூலமாக எங்களது கிரடிட் அலுவலகம் திருச்சிக்கு அனுப்பி அதை 28.05.2021 அன்று வசூலுக்காக அனுப்பப்பட்டு அதில் காசோலை எண்.006657 என்பது போதிய பணமில்லை என்ற காரணத்தினாலும், மீதி நான்கு காசோலைகள் Stop payment என்ற காரணத்தினாலும் 29.05.2021 அன்று பணமாகாமல் திரும்பப்பட்டது. அதன் குறிப்பாணையை திருச்சி அலுவலகத்தால் 07.06.2021 அன்று இந்த வாடிக்கையாளருக்கு அனுப்பப்பட்டு அதை இந்த வாடிக்கையாளரால் 11.06.2021 அன்று பெறப்பட்டுள்ளது. அவ்வாறு அனுப்பப்பட்டதற்கான எங்களது கணினியில் பராமரிக்கப்படும் நகலை உண்மை நகல் சான்றிட்டு இத்துடன் தாக்கல் செய்கிறேன். அது **ம.சா.ஆ.1.**

Taken down by / before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused/ pleader and admitted by the witness to be correct.

Sd/-
Judicial Magistrate No.I,
Perambalur.

CNV Pdf